[26th August 1961

The Madras General Sales Tax Act

* 1424 Q.—**Sri S. M. ANNAMALAI :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விற்பனை வரிச் சட்டத்தை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Sri S. M. ANNAMALAI : இந்த விற்பனை வரி சட்டம் 1959-ல் ஏற்பட்டது. இரண்டாண்டுகளுக்குள் மூன்றுவது திருத்தம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. ஏன் அடிக்கடி அப்படி திருத்தங்கள் செய்ய வேண்டும் ? எல்லாவற்றையும் பரிசீலனை செய்து ஒரே திருத்த மசோதாவாக கொண்டு வருவதற்கு சர்க்கார் முன் வரக்கூடாதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஜனங்களுடைய கோரிக் கையிலே எப்பொழுது பார்த்தாலும் திருத்தம் வந்துக்கொண்டிருக்கிறது. முதலிலே ஒரு முனை வரிவேண்டுமென்று கேட்டார்கள். இப்பொழுது பலமுனை வரி வேண்டுமென்று கேட்கிறார்கள். அதிலே நியாயம் இருக் கிறது, சர்க்காருடைய வருமானம் பாதிக்கப்படுகிறது என்று தெரிந்தால் நாங்கள் திருத்துகிறோம். சர்க்காராகவே இதையெல்லாம் திருத்துவதில்லை. ஜனங்களுடைய கோரிக்கைகளை வைத்துக்கொண்டுதான் திருத்து கிறோம். விற்பனைவரி போன்ற வரிச் சட்டங்களை ஐந்து வருடத்திற்கொரு முறை ஆராய்வது நல்லது. ஐந்து வருடங்களுக்குப் பிறகு ஒரு நிபுணர் போட்டு ஆராய்ச்சி செய்யலாம். இதைப்பற்றி அந்த சமயத்தில் யோசனை செய்யப்படும்.

Strike (B. & C. Mills)

* 1426 *Q.*—**Sri S. PAKKIRISAMI PILLAI :** Will the Hon. the Minister for Industries be pleased to state the action taken by the Government on the strike notice given by the Madras Labour Union as a result of the management of the B. & C. Mills having refused to concede it demands of the B. & C. Mill workers?

THE HON. SRI R. VENKATARAMAN : Conciliation was held by the Labour Officer, Madras, but no settlement was possible. After examining the conciliation reports, the Government referred the following demands for adjudication.

(i) Gratuity scheme to the operatives of the Mills.

(ii) Revision of the gratuity scheme for the staff; and

(iii) Fixation of scales of pay for the several categories of staff in the light of the recommendations of the Central Wage Board for the Cotton Textile Industry, classification and fitment.

Sri S. PAKKIRISAMI PILLAI : டெக்ஸ்டைல் மில் இப்பொழுது பப்ளிக் யூட்டிலிடி சர்விஸ் என்ற தலைப்பின் கீழ் வருகிறது. அதிலே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களின் கோரிக்கைகள் அவ்வளவையும் கோர்ட்டுக்கு விடவேண்டும், பகுதி பகுதியாக விடக்கூடாது என்று சட்ட விதிகள் சொல்லுகின்றன. அந்த முறையிலே இவர்கள் கோரிக்கைகளை மொத்தமாக விடாமல், சில கோரிக்கைகளை மட்டும் விட்டு மீதியை நிறுத்திவைப்பதற்கு காரணமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்லு வது சட்டப்படி சரியல்ல. பப்ளிக் யூட்டிலிடி சேர்விஸில்கூட சர்க்கார் சரி என்று நினைத்தால்தான் அட்ஜுடிகேஷனுக்கு விடவேண்டும். எல்லாக் கோரிக்கைகளையும் விடவேண்டுமென்று சொல்லுவது சட்டபூர்வமாக தவறு. ஏன் இதைப்பொறுத்தவரையில் விடவில்லையென்று சொன்னால் அதற்கு